செ.வெ.எண்: 252 நாள்: 20.05.2021

**கோவிட் தொற்றால் உயிரிழந்த வட்டாட்சியர் திரு.சுரேஷ் கண்ணன் அவர்களின் திருவுருவப்படத்திற்கு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் மலர்தூவி அஞ்சலி செலுத்தினார்.**

---

கொரோனா தொற்றால் உயிரிழந்த வட்டாட்சியர் திரு.சுரேஷ் கண்ணன் அவர்கள் திருவுருவப்படத்திற்கு புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியரகத்தில் ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் இன்று (20.05.2021) அஞ்சலி செலுத்தினார். பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது.

கோவிட் தொற்றில் இருந்து பொதுமக்களை பாதுகாக்கும் வகையில் தமிழக அரசு பல்வேறு நடவடிக்கைகளை போர்க்கால அடிப்படையில் மேற்கொண்டு வருகிறது. மேலும் தமிழக அரசின் பல்வேறு நோய் தடுப்பு நடவடிக்கைகள் சுகாதாரத்துறை, காவல்துறை மற்றும் வருவாய்துறை உள்ளிட்ட பல்வேறு துறைகளின் முன்களப்பணியாளர்கள் மூலம் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதனால் கோவிட் தடுப்பு பணிகளில் முன்நின்று பணியாற்றும் காரணத்தினால் முன்களப்பணியாளர்கள் கோவிட் தொற்றிற்கு ஆளாகின்றனர்.

அறந்தாங்கி சார் ஆட்சியரின் நேர்முக உதவியாளராக பணியாற்றி வந்தவர் வட்டாட்சியர் திரு.சுரேஷ் கண்ணன் அவர்கள் கோவிட் தடுப்பு பணிகளை சார் ஆட்சியருடன் இணைந்து தீவிரமாக மேற்கொண்டு வந்தார். மேலும் பொதுமக்களின் பல்வேறு கோரிக்கைகளை நிறைவேற்றுவதிலும் அர்ப்பணிப்புணர்வுடன் செயலாற்றி வந்தார்.

இவ்வாறு முன்களப்பணியாளராக கோவிட் தடுப்பு நடவடிக்கையில் திறம்பட பணியாற்றி வந்த வட்டாட்சியர் திரு.சுரேஷ் கண்ணன் அவர்களுக்கு கொரோனா தொற்று ஏற்பட்டு மருத்தவமனையில் அனுமதிக்கப்பட்டார். மருத்துவமனையில் தீவிர சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். அவரது குடும்பத்தினருக்கும், உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக்கொள்கிறேன்.

எனவே கோவிட் தடுப்பு பணிகளை மேற்கொண்டு வரும் முன்களப்பணியாளர்கள் அனைவரும் கட்டாயம் முகக்கவசம் அணிவதுடன், சமூக இடைவெளியை கடைபிடித்தல், கைகளை அடிக்கடி கழுவுதல் போன்ற கோவிட் தடுப்பு வழிமுறைகளை தவறாது பின்பற்ற வேண்டும். ஏதெனும் அறிகுறிகள் தென்பட்டால் உடனடியாக அருகில் உள்ள அரசு மருத்துவமனைகளில் கோவிட் பரிசோதனை செய்து சிகிச்சை பெற்றுக்கொள்ள வேண்டும். முன்களப்பணியாளர்களின் பாதுகாப்பே பொதுமக்களின் பாதுகாப்பாகும். எனவே முன்களப்பணியாளர்கள் உரிய பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு, கோவிட் தடுப்பு பணிகளை மேற்கொள்ள வேண்டும்.

கோவிட் தொற்றால் நம்மை விட்டு பிரிந்த அறந்தாங்கி சார் ஆட்சியரின் நேர்முக உதவியாளர் வட்டாட்சியர் திரு.சுரேஷ் கண்ணன் அவர்களின் குடும்பத்திற்கு தேவையான அனைத்து உதவிகளும் கிடைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் அறந்தாங்கி சார் ஆட்சியர் ஆனந்த் மோகன், இ.ஆ.ப., மாவட்ட வருவாய் அலுவலர் பெ.வே.சரவணன் உள்ளிட்ட பல்வேறு துறை அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

---

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், புதுக்கோட்டை.**